**போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - 2023**

---

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதிய 5788-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் II, ஆ(3) மற்றும் 4.09 (ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சொத்து முகாமைத்துவத்துக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை வலுப்படுத்துதல் மற்றும் பேலியகொடவிலிருந்து புத்தளம் வரையான வீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜா-எல முதல் சிலாபம் நகரின் இறுதி வரையான ஏறத்தாழ 58 கிலோமீற்றர் வீதிப் பிரிவு தொடர்பாக முன்னோடி முகாமைத்துவ கோட்பாட்டிற்கான வெளியீடு மற்றும் செயலாற்றல் அடிப்படையிலான ஒப்பந்த (OPBRC) வடிவத்தை பயன்படுத்தி வடிவமைத்தல் - நிர்மாணித்தல் - பராமரித்தல் (DBM) ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். அபிவிருத்தி கடன் உடன்படிக்கை இல. 5788 இன் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 125 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 90.5 மில்லியன் அல்லது ரூபா 18,125 மில்லியனானதுடன் மொத்த தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் (IDA) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. எனினும் 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவை திர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கெல்லை மாற்றியமைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆரம்ப கடன் ஒதுக்கீட்டில் ரூபா 14,500 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் செயற்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு அனைத்து மாகாண விதிகளின் மேம்படுத்தல்களிற்காக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மீதமாகவுள்ள மீதியில், ரூபா 2,320 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 16 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை தொடர்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 1,232.5 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 8.5 மில்லியன் தொகை வீதி பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் மொத்த கடன் ஒதுக்கீடு 2020 மே 6 இல் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோலின் பிரகாரம் கொவிட் 19 பதிலளிப்பிற்கு ஐ.அ.டொலர் 7 மில்லியன் மாற்றப்பட்டதன் காரணமாக ரூபா 1,305 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9 மில்லியன் வரை மீண்டும் குறைக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 15 இல் மீளக்கட்டமைத்து 2023 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்திருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10.91 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் அறவிடப்பட்டதாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக ரூபா 10.91 மில்லியன் நடைமுறை சொத்துக்கள் நிதி நிலைமை கூற்றில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 10.91 | இணங்கப்பட்டது. ரூபா 10,914,681.26 அறவிடப்படக்கூடிய வேலை ஆரம்பிப்பு முற்பணம் நாட்குறிப்பு பதிவை பதிவுசெய்து மீளக்குறிப்பிடப்பட்டிருந்தது, தற்போது இது சீர்செய்யப்பட்டுள்ளது. | தற்போதைய நிலை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ii) | சொத்துக்கள் இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர் LC முற்பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நடைமுறையல்லாத சொத்துக்கள் ரூபா 155.29 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 155.29 | இணங்கப்பட்டது. ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் LC இன் மீதித் தொகை வாங்குபவரால் ஏற்றுக்கொண்டதற்கான சான்றிதழை வழங்கிய பின்னர் விடுவிக்கப்பட்டது. | ஏஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இல. 7 ஐ பின்பற்றுதல். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | |
| | சதவீதம் | சதவீதம் | | |
| போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் (TCAMP) இறுதித் திகதி 2023 செப்தெம்பர் 30 ஆக இருந்த போதிலும் செயற்திட்டத்தின் முக்கிய செயற்பாடுகளின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்கிடப்பட்ட 100 சதவீத முன்னேற்றத்திற்கு எதிராக 98.81 சதவீதமாக இருந்தது. | 100 | 98.81 | செயற்திட்ட செயலாற்றலில் எதிர்மறையான தாக்கம் | ஒப்பந்த இல. எல்கே-ஆர்டிஏ-148668 என்சீ-ஆர்எவ்பீ ஏற்பட்ட சில தகராறு காரணமாக 2023.12.31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

**முகாமைத்துவத்தின் பதில்** இணங்கப்பட்டது.
ஒப்பந்த இல. எல்கே-ஆர்டிஏ-148668 என்சீ-ஆர்எவ்பீ தவிர அனைத்து செயற்திட்ட நடவடிக்கைகளும் ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் 100% நிறைவடைந்துள்ளது, எனவே ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 2023.12.31 இல் உள்ளவாறு 98.81% ஆக இருந்தது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** வேலைத் திட்டத்தின் பிரகாரம் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் செயற்பாடுகள், சொத்து முகாமைக்கான நிறுவன ரீதியான வலுப்படுத்தல் மற்றும் திறன் மேம்பாடு ஆகிய 2 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகிறதுடன் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ஐ.அ.டொலர் 125 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 90.5 மில்லியன் அல்லது ரூபா 18,125 மில்லியன் ஆகும். எனினும், 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கெல்லை மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஆரம்பக் கடன் ஒதுக்கீட்டில் ரூபா 14,500 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் செயற்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, அந்தத் தொகை அனைத்து மாகாண வீதிகளையும் மேம்படுத்துவதற்காக மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை | இணங்கப்பட்டது. | வேலைத் திட்டத்தின் பிரகாரம் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மீதமுள்ள மீதியில், செயற்திட்டத்தின் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு ரூபா 2,320 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 16 மில்லியன் தொகை மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,232.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8.5 மில்லியன் தொகையான மீதி வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும், 2020 மே 6 இல் இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் ஐ.அ.டொலர் 7 மில்லியனை கொவிட் 19 பதிலளிப்பிற்கு மாற்றியதன் காரணமாக செயற்திட்டத்திற்கான மொத்த கடன் ஒதுக்கீடு மீண்டும் ரூபா 1,305 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. இறுதியாக ரூபா 2,086 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 7 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் செயற்பாடுகளை தொடர்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு ஆதரவளிப்பதற்காக ஐ.அ.டொலர் 2 மில்லியன் தொகையான மீதி மாற்றப்பட்டிருந்தது. இச் செயற்திட்டம் 2016 யூன் 30 இல் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்து 2018 ஆகஸ்ட் 15 இல் மறுசீரமைக்கப்பட்டு 2023 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியடைந்திருந்தது. மேலும், கடன் நிதியை மட்டுப்படுத்தியதால், நிறுவன மற்றும் ஆளுகைச் சீர்திருத்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை அமுல்ப்படுத்த முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கடன் பெறுகைகளின் ஒரு பகுதியானது ஆலோசனை அல்லாத சேவை ஒப்பந்தத்தில் உள்ள செலவினத்தின் கொடுப்பனவுகளிற்காக விண்ணப்பிப்பதற்கு விரும்புகிறதுடன் ஒப்பந்தத் தொகை ரூபா 190.77 மில்லியனாக இருந்ததுடன் 2021 யூன் 24 இல் தொடங்கப்பட்டு 2023 பெப்ரவரி 23 இல் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், அசல் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 85 சதவீத பௌதீக முன்னேற்றம் மாத்திரமே பதிவாகியுள்ளது. | இணங்கப்பட்டது. | வேலைத் திட்டத்தின் பிரகாரம் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் இனங்காணப்படாத முரண் கட்டளைகளின் கீழ் மேலதிக பணிகள் இனங்காணப்பட்டதன் காரணமாக, ஆலோசனைப் பணியின் ஆரம்ப நோக்கெல்லை மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது, ஒப்பந்தம் பெறுகைக் கையேட்டின் பின்னிணைப்பு 14 இன் பிரகாரம் அங்கீகாரம் பெறாமல் ஒப்பந்த பொதியின் மொத்த செலவில் 17.79 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 29.23 மில்லியன் கூட்டுமொத்தமான முரணை மேற்கொண்டிருந்தது. | ஆரம்ப கட்டத்தில் வழங்கப்பட்டாலும், முரண் இல. 4&5 இற்கான அங்கீகாரத்தை PMU மீளப்பெற்றிருந்தது. பின்னர் அதே பணி நோக்கெல்லையின் கீழ் இந்த பணிகளை மேற்கொள்ளுமாறு சேவை வழங்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. | ஆரம்ப கட்டத்தில் வேலைகளின் சரியான நோக்கெல்லையை இனங்காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் (GCC) 3.1 ஆம் உட்பிரிவின் பிரகாரம், சேவை வழங்குநர் விபரக்குறிப்புக்கள் மற்றும் சேவை விபரங்களிற்கு இணங்க சேவைகளை மேற்கொள்ள வேண்டும். ரூபா 161 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் நெடுஞ்சாலைகளின் வடிவியல் (Geometric) வடிவமைப்பின் நோக்கங்களுக்காக ஆலோசனை அறிக்கையைப் பயன்படுத்த முடியவில்லை. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவை விடுவிப்பது கணக்காய்வில் சிக்கலாக இருந்தது. | இணங்கப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ள சேவை விபரத்தின் பிரகாரம் இறுதி அறிக்கையை பூர்த்திசெய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (உ) | மேற்கு, வடமேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் வீதி முன்பதிவு மற்றும் வடிகால் வரைபடங்களை தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தின் நோக்கம் மற்றும் தற்போதுள்ள வடிகால் முறைமை மற்றும் தேசிய GIS வடிவத்தின் தேவையான வடிகால் மேம்பாடுகளை இனங்காண்பது பற்றிய விபரங்களை சேகரிப்பது. ரூபா 10.79 மில்லியன் கிரயத்திலான முரண் கட்டளை இல. 01, 02, 03 மற்றும் 06 ஆனது சாரதியின் சம்பளக் கொடுப்பனவு மற்றும் ஒப்பந்தத்தின் நோக்கெல்லையில் இல்லாத டபிள் கெப் வண்டியை வழங்குவது என்பவற்றிற்காக ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. | செயற்திட்ட செயற்பாடுகளை செயற்திட்ட நோக்கெல்லைக்குள் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | சேவை வழங்குநரின் செயலாற்றல் மிகவும் மோசமாக இருந்த போதிலும் ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனையின் 3.8.1 ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து தாமத சேதங்களைக் கழிப்பதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ED & PMC ஸ்கில்ஸ் JV கம்பனியிடமிருந்து ரூபா 9.5 மில்லியன் தொகையான தாமத சேதங்கள் கழிக்கப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த ஒப்பந்தம் தொடர்பான தகராறுகளைத் தீர்ப்பதற்காக தீர்ப்பு சபை (DAB) நியமிக்கப்பட்டுள்ளதுடன் DAB தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்த கொடுப்பனவின் போது தாமத சேதங்களை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் தாமத சேதங்களை கோருவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | வுழங்குநரிற்கு விடுவிக்கப்பட்டிருந்த டிரக் வண்டியிலிருந்து வான்வழி பிளாட் (aerial plat) விநியோகம் செய்ததற்காக கொடுப்பனவிலிருந்து ரூபா 5 மில்லியன் தொகையான தாமத சேதங்கள் அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, ரூபா 5 மில்லியன் தொகையான தாமத சேதங்கள் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டு, நிதிக்கூற்றில் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. தாமத சேதங்களை விடுவிப்பது கணக்காய்வில் சிக்கலானதொன்றாக இருந்தது. | சில காரணங்களால் வாகனத்துடன் இணங்கியவாறு உதிரிப் பாகங்களை வழங்க முடியவில்லை என வழங்குநர் தெரிவித்துள்ளார். | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் தாமத சேதங்களை கோருவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |